திரு. கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் பணியாற்றக் கூடிய எல்லா அதிகாரிகளுக்கும் மலைப்படி வழங்கப்படுகின்றது. அதேபோன்று இந்த அமைப்பாளர்களுக்கும் மலைப்படியைச் சேர்த்துத்தர குறிப்பு ஏதாவது உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மலைப்பகுதியிலே இருக்கின்றவர்கள் தான் அந்தப் பணியிலே அமர்த்தப்படுகிறார்கள். ஆகவே, அவர்களுக்கென்று தனிச் சலுகைத் தேவையில்லை.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு மத்திய அரசாங்கம் கொடுக்கின்ற சம்பள விகிதம் எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, இரண்டு விதமான சம்பள விகிதங்கள் வழங்கப்படுகின்றன. ஆகவே, தனிக் கேள்வி போடவும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பனைவெல்ல கூட்டுறவுச் சங்கங்கள்.

257—(*வினா எண். 9054)—திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பனைவெல்ல கூட்டுறவுச் சங்கங்கள் இயங்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை இயங்க வைக்க திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இயங்காமல் உள்ள சங்கங்களை அவைகளின் அருகாமையிலுள்ள செயல்படும் சங்கங்களுடன் ஒருங்கிணைத்து செயல்பட வைக்க தக்க நடவடிக்கையினை தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் ஏடுத்து வருகிறது.

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் நல்லாறு அணைக்கட்டு

258—(*வினா எண். 440)—திரு. இரா. தாமரைக்கனி, திரு. பி. கந்தசாமி, திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தில் நல்லாறு என்னுமிடத்தில் அணைகட்டும் திட்டம் அரசு ஆய்வில் உள்ளதா